1205

# கந்தரனுபூதி

பாட்டும் குறிப்பும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 -MAR 1927
MADRAS

வாவிள்ள இராமசாமி சாஸ்த்ருலு & ஸன்ஸ்

சென்னை.

1927

Q26:417
M27
178381

# APPEAL.

Pioneer work in Sanskrit and Telugu printing and publishing undertaken by us has resulted in good editions of almost all the classics in these two languages. Our steady efforts for the past seventy years have brought within the reach of all classes of readers in the Telugu country not only most of the classics in Sanskrit and Telugu but innumerable other modern works as well. It will not be deemed presumptuous if we say that our name has now come to be identified in the mind of the reading public with the production of good editions of almost all the standard works in Sanskrit and Telugu literatures.

Tamil literature, especially the works of the Sangham age, embodying as they do the best elements of ancient Dravidian thought, culture and civilisation, should have a permanent and abiding place in the homes of all true sons of Southern India whether Tamil or non-Tamil. It is with the object of facilitating the easy spread of good editions of the Tamil classics etc., that we are organising a separate branch for Tamil publications which we hope will soon grow to cover a wide field.

Our aims in this respect are, first, to print and publish the chief classics under the guidance and editorship of the best scholarship and talent available in the Tamil country, in the best manner possible, supplying to every book a good introduction, notes, variant readings, etc., and also to make accessible to non-English knowing

உ

அருணகிரி நாதர்

அருளிச்செய்த

# கந்தரநுபூதி

பாட்டும் குறிப்பும்

2370
894.8111

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 MAR 1927
MADRAS

பதிப்பாசிரியர் :

சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர்

மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்.

வெளியிடுவோர் :

வாவிள்ள

இராமசாமி சாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ்

292, எஸ்பிளனேட், சென்னை.

*All Rights Reserved*] [அக்ஷய தை

PRINTED AT THE SRI RAMA PRESS,

15, BROADWAY, MADRAS.—1927.

கடவுள் துணை

# பதிப்புரை

வட மொழியிலும் தெலுங்கிலு முள்ள சிறந்த நூல்களைச் சென்ற எழுபது ஆண்டுகளாக ஒழுங்காக அச்சிட்டுக் கொண்டு வருகின்ருேம். எமது முயற்சியின் பயனுக இவ்விரு மொழிகளிலும் சிறந்து விளங்கும் அரிய பழைய நூல்களும் புதிய நூல்களும் அச்சிடப்பட்டு எல்லாருக்கும் எளிதிலே பயன்பட்டு வருகின்றன. இத்தகைய எமது முயற்சியினுல் ஏறக்குறைய எல்லா நூல்களும் சிறப்பு முறையில் அச்சிட்டு வெளியாகி யாவராலும் போற்றப் பட்டு வருகின்றன.

தமிழ் மொழியில் விளங்குகின்ற சங்க நூல்கள் தமிழர் எண்ணங்களேயும், கல்வி அறிவு நுட்பங்களேயும், நாகரிக இயல்புகளேயும் இனிது விளக்குதலின் அவற்றைத் தமிழ் நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் அறிய வேண்டுவது கடமையாகும். இக்கருத்துக் கிணங்கத் தமிழ் நூல்கள் எல்லாவற்றையும் உயர்ந்த பதிப்புக்களாக அச்சிட எண்ணி ஒருதனி அச்சுக்கூடத்தை அதற்கெனவே வரையறுத்து வைத்துள்ளோம். இது நாளடைவில் வளர்ச்சியுறுமென நம்புகின்ருேம்.

தமிழில் நிறைந்த புலமையுடைய அறிஞர்களைக் கொண்டு ஒவ்வொரு புத்தகத்துக்கும் குறிப்புரை, முகவுரை, பாடபேதம் முதலியவற்றைச் செவ்வையாக எழுதுவித்துத் தகுந்த முறையில் அச்சிட்டு வெளியிடுதலும், ஆங்கிலம் அறியாத தமிழ் மக்கள் இனிது உணர்ந்து பயனடையுமாறு கதை, பௌதிக சாத்திரம், இரசாயன சாத்திரம், தத்துவ சாத்திரம், தேசீய சாத்திரம், பொருள் நூல் முதலியவற்றைத் தக்கவர்களைக் கொண்டு நன்கு மொழி பெயர்த்து அழகிய உரை நடையில் ஆராய்ந்து எழுதுவித்து வெளியிடுதலும் எமது நோக்கங்களாகும்.

இவ் வகையில் இடம், பொருள், ஏவல் கிடையாமையினால் இதுவரையில் வெளிப்படா திருக்கும் அறிவு ஆராய்ச்சி நுட்பங்கள் இதனால் வெளிவர இடம்பெறுமாயின் எமது முயற்சி பயனடைந்ததென எண்ணி மகிழ்வோம். தமிழகத்தார் எமது முயற்சி இனிது முடியுமாறு உதவிசெய்ய வேண்டுமென எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வழுத்துகின்றோம்.

உடனே வெளிவரும் எமது பதிப்புக்கள் :

வசன நூல்கள்

1. சீவகாருண்ய ஒழுக்கம்
2. பஞ்ச தந்திரம்
3. விநோதரச மஞ்சரி
4. கதா மஞ்சரி

திருக்குறள் விளக்கநூல்கள்

1. சிவசிவ வெண்பா
2. திருத்தொண்டர்வெண்பா
3. இரங்கேச வெண்பா
4. ஆத்திசூடி வெண்பா

### நீதி நூல்கள்

1. திருக்குறள்
2. நாலடியார்
3. நீதி நெறி விளக்கம்
4. ஆசாரக் கோவை

### திரட்டு நூல்கள்

1. அருட்பா
2. தேவாரம்
3. திருப்புகழ்
4. பட்டினத்தார் பாடல்
5. தாயுமானவர் பாடல்

### இலக்கணமும் நிகண்டும்

1. நேமிநாதம்
2. புறப்பொருள்வெண்பாமாலை
3. பதினோராவது நிகண்டு
4. திவாகரம்

### பாராயண நூல்கள்

1. இலக்குமி தோத்திரம்

வாவிள்ள இராமசாமி சாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ்.

# அருணகிரி நாதர்

இவர் திருவண்ணுமலையிலே இற்றைக்கு ஏறக்குறைய நானூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்திருந்தவர். இவருடைய சமயம் சைவம். இவர் இளம் பருவத்திலே சிற்றின்பத்திலே எளியராக இருந்து தொழுநோய் கொண்டு துன்புற்றனர் என்றும் பின்பு முருகப் பெருமான் திருவருளைப் பெற்றனர் என்றுங் கூறுவர். இவருக்கும் பாரதம் பாடிய வில்லுபுத்தூராருக்கும் வாதம் நிகழ்ந்ததாகவும் அதிலே வில்லி, அருணகிரியார் தகர வருக்கத்தால் அப்போதே அமைத்த ஒரு செய்யுட்கு உரை காணுது மயங்கியமையால் தோற்றனர் என்றும் வரலாறு உண்டு.

இவர் முருகனிடத்து அளவிலாப் பேரன்பு வாய்ந்த மெய்யடியவர். இவர் அப் பெருமான்மேல் பாடிய திருப்புகழ் என்னும் அருணூலை அறியாதார் தமிழகத்தே இல்லை. திருப்புகழ் அவரால் புதிய வகையிலே சந்தம் அமைத்துப் பாடப்பட்ட செந்தமிழ்ச் செல்வம். இவர் இயற்றி யருளிய கந்தரந்தாதி எவ்வெவர் உள்ளத்தையும் உருக்குவது.

கந்தரனுபூதியிலேதான் தத்துவஞான வித்தகரால் பன்முறையும் எடுத்தாளப்படும் இரண்டு அருமைச் செய்யுட்களையும் காணலாகும். அவற்றைக் கொண்டே அருண

கிரி நாதர் ஞான விலாசத்தைப் புலவர் போற்றுவர். தாயு மானவர், 'கந்தரனுபூதி பெற்றுக் கந்தரனுபூதி சொற்ற எந்தை அருணகிரி' என்றும், 'ஐயா அருணகிரி அப்பா உனைப்போல மெய்யா ஒருசொல் விளம்பினர் யார்? என்றும் இவரை வாயாரப் புகழ்ந்து வாழ்த்தினர்.

'ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா அனுபூதி பிறந்ததுவே'

'சும்மா இருசொல் லறஎன் றலுமே
அம்மா பொருளே தும்அறிந் திலனே'

என்னும் இவையே முன்னர்க் குறிப்பிடபட்ட செய்யுட்களிலே வரும் அடிகள். இவை சைவ சித்தாந்த நுட்பம் இன்னதெனத் தெரித் துணர்த்துதல் காண்க.

இவருக்குச் சைவ சமய குரவரிடத்து இருந்த அன்பு மேம்பாட்டைத் திருப்புகழ்ப் பாக்களிலே காணலாம். இவர் பெருமை நாடோறும் தோன்றிக் கொண்டே வரும் 'திருப்புகழ்ப் பாராயண சங்கங்களால்' இனிது உணரப் படும்.

மணி. திருநாவுக்கரசு முதலியார்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - MAR 1927
MADRAS

உ

திருச்சிற்றம்பலம்

# கந்தரநுபூதி

## காப்பு

நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரஆ னைபதம் பணிவாம்.

தஞ்சம் - புகலிடம். சண்முகன் - ஆறுமுகங்களை யுடையவன். சொற்புனைமாலை - சொற்களால் அலங்கரிக்கப்பட்ட பாமாலை. பஞ்சக்கரம் - ஐந்து கைகள். பதம் - திருவடி.

---

## நூல்

ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

பரி - வாகனமாகிய மயில். அணி - அழகிய. பணி - தொழில். கயமாமுகன் - யானைமுகாசூரன். செரு - போர். சாடும் - அழிக்கும். 1

உல்லா சநிரா குலயோ கஇதச்
சல்லா பவிநோ தனுநீ யலையோ

எல்லாம் அறஎன் னைஇழந் தநலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே.

உல்லாசன் - ஆனந்தத்தை யுடையவன். நிராகுலன் - வருத்த மில்லாதவன். இதன் - நன்மையையுடையவன். சல்லாபம் - களிப்பு. வினோதம் - விளையாட்டு. எல்லாம்- எல்லாத் தத்துவங்களும். முருகன் - மாறாத இளமையை யுடையவன். சுரர் - தேவர். பூபதி - தலைவன். 2

வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண் டஇடந்
தானோ பொருளா வதுசண் முகனே.

வான் - ஆகாயம். புனல் - நீர். பார் - நிலம். கனல் - தீ. மாருதம் - காற்று. நவிலல் - சொல்லல். 3

வளைபட் டகைமா தொடுமக் களெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூர் உரமுங் கிரியுந்
துளைபட் டுருவத் தொடுவே லவனே.

வளைபட்ட - வளையலையணிந்த. தளை - பந்தம். சூர் - சூரபத்மன். உரம் - வலிமை. கிரி - கிரௌஞ்சமலை. 4

மகமா யைகளைந் திடவல் லபிரான்
முகமா றுமொழிந் துமொழிந் திலனே
அகம்ஆ டைமடந் தையரென் றயருஞ்
சகமா யையுள்நின் றுதயங் குவதே.

மகம் - மகத்தென்னுந் தத்துவம். அகம் - வீடு. மடந்தையர் - பெண்கள். அயரும் - வருந்துகின்ற. தயங்குதல் - சஞ்சலப்படுதல். 5

திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியார் அரவிந் தம்அரும் புமதோ

பணியா எனவள் ளிபதம் பணியுந்
தணியா அதிமோ கதயா பரனே.

திணியா - திண்ணிதான. சிலை - கல். தாள் - பாதம். அரவிந்தம் - தாமரை. அரும்புதல் - தோன்றுதல். தயை - கிருபை. பரன் - மேலானவன். 6

கெடுவாய் மனனே கதிகேள் கரவாது
இடுவாய் வடிவே லிறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே.

கதி - உய்யும் வகை. கரவாது - ஒளிக்காமல். தூள்பட-துகள் எழ. வேதனை - துன்பம். 7

அமரும் பதிகேள் அகமா மெனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள்பே சியவா
குமரன் கிரிரா சகுமா ரிமகன்
சமரம் பொருதா னவநா சகனே.

அமர்தல் - கூடி இருத்தல். கேள் - சுற்றம். பிமரம் - இருள். கிரி - மலை. சமரம் -சண்டை. தானவர் - அவுணர். 8

மட்டூர் குழல்மங் கையர்மை யல்வலைப்
பட்டூ சல்படும் பரிசென் றொழிவேன்
தட்டு டறவேல் சைலத் தெறியும்
நிட்டு ரநிரா குலநிர்ப் பயனே.

மட்டு - தேன். குழல் - கூந்தல். மையல் - ஆசை. ஊடு - பிணக்கு. சைலம் - மலை. நிட்டுர - கோபத்தை யுடையவனே. 9

கார்மா மிசைகா லன்வரிற் கலபத்து
ஏர்மா மிசைவந் தெதிரப் படுவாய்

தார்மார் பவலா ரிதலா ரியெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே.

கார்மா - கரிய மிருகம்: எருமைக்கடா. காலன் - எமன். கலபம்: கலாபம் - தோகை. ஏர்மா - அழகிய மயில். தார்- மாலை. வலாரி - இந்திரன். அரி - பகை. சூர்மா - மாமரவடிவான சூரபதுமன். 10

கூகா எனஎன் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவித்
தியாகா சுரலோ கசிகா மணியே.

கிளை - சுற்றத்தார். நாகாசலம் - திருவேங்கடமலை. நாலுகவி - ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம். 11

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா இருசொல் லறஎன் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே.

செம்மான்மகள் - செம்மையான மானினது மகளாகிய வள்ளி நாயகி. பெம்மான் - பெருமான். 12

முருகன் தனிவேல் முனிநங் குருஎன்று
அருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்று
இருளன் றொளியன் றெனநின் றதுவே.

தனி - ஒப்பற்ற. வேல்முனி - வேற்படையைத் தாங்கிய பெருமான். 13

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று
உய்வாய் மனனே ஒழிவா யொழிவாய்

மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியாம்
ஐவாய் வழிசெல் லுமவர் வினையே.

கைவாய் - கையிடத்தில். கதி - ஒளி பொருந்திய. கழல் - திருவடி. உய்வாய் - பிழைப்பாய். அவா - ஆசை. 14

முருகன் குமரன் குகனென் றுமொழிந்து
உருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங் கவஎண் குணபஞ் சரனே.

புங்கவர் - தேவர். புவி - பூமியிலுள்ளவர். குரு புங்கவன் - குருராயன். பஞ்சரன் - திருமேனியை யுடையவன். 15

பேரா சையெனும் பிணியிற் பிணிபட்டு
ஓரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோ கதுரந் தரனே.

பிணி - நோய். பிணிபட்டு - கட்டுப் பட்டு. ஓர்தல் - உணர்தல். பட - அழிய. துரந்தரன் - பாதுகாப்பவன். 16

யாமோ தியகல் வியுமெம் மறிவுந்
தாமே பெறவே லவர்தந் ததனாற்
பூமேல் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே னடவீர் நடவீ ரினியே.

ஓதிய – பயின்ற. பூ- பூமி. மயல்- மயக்கம். நா - நாவானே. 17

உதியா மரியா உணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா அநகா அபயா அமரா
வதிகா வலசூ ரபயங் கரனே.

உதித்தல் - பிறத்தல். மரித்தல் - இறத்தல். விதி - பிரமன். விமலன் - மலமுத்தனுகிய சிவபெருமான். அதிகன் - யாவரையும் விடமிக்கவன். அநகன் - பரிசுத்தன். அமராவதி- இந்திரன்நகர். 18

வடிவுந் தனமு மனமுங் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வே லரசே
மிடியென் ஞெருபா விவெளிப் படினே.

வடிவு - அழகு. குடிபோகியவாறு - குடிபோனவிதம் என்ன. அடி - ஆதி. அந்தம் - முடிவு. அயில் - கூர்மையான. மிடி - வறுமை. 19

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா வுபதே சமுணர்த் தியவா
விரிதா ரணவிக் ரமவே ளிமையோர்
புரிதா ரகநா கபுரந் தரனே.

விக்ரம - வலிமையை யுடைய. வேள் - செவ்வேள். புரி தாரக - விரும்புகின்ற பிரணவப் பொருளாவாரே. நாக புரந்தரன் - தேவருலகைக் காக்குமவன். 20

கருதா மறவா நெறிகா ணஎனக்கு
இருதாள் வனசந் தரஎன் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூ ரவிபா டணனே.

நெறி - முத்திநிலை. வனசம் - தாமரை. சூர் அவிபா டணன் - சூர்ப் பகையின் செல்வத்தை அழிப்பவன். 21

காளைக் குமரே சனெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே.

தாள் - திருவடி. குழல் - கூந்தல். மேரு - இமயமலை. 22

அடியைக் குறியா தறியா மையினல்
முடியக் கெடவோ முறையோ முறையோ

வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே.

முடிய - முற்றும். குறமின்கொடி - மின்னற்கொடிபோன்ற குறமாது. பூதரன் - மலைக்கு ஒப்பானவன். 23

கூர்வேல் விழிமங் கையர்கொங் கையிலே
சேர்வே னருள்சே ரவுமெண் ணுமதோ
சூர்வே ரொடுகுன் றுதுளைத் தநெடும்
போர்வே லபுரந் தரபூ பதியே.

கொங்கை - ஸ்தனம். குன்று - கிரௌஞ்ச கிரி. 24

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்து
ஐயோ அடியே னலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலே றியசே வகனே.

செய்யோய் - செந்நிறமுடையானே. 25

ஆதா ரமிலே னருளைப் பெறவே
நீதா னொருசற் றுநினைந் திலையே
வேதா கமஞா னவிநோ தமனோ
தீதா சுரலோ கசிகா மணியே.

ஆதாரம் - ஆதரவு. 26

மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே அருளே
மன்னே மயிலே றியவா னவனே.

வானவன் - தெய்வம். 27

ஆனா அமுதே அயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ

யானு கியஎன் னைவிழுங் கிவெறுந்
தானய் நிலைநின் றதுதற் பரமே.

ஆனு - விட்டு நீங்குதலில்லாத. ஞானகான் - ஞானமாகியதிரு மேனியையுடையவன். நவிலல் - சொல்லல். பரம் - நிலைமை. 28

இல்லே யெனுமா யையிலிட் டனைநீ
பொல்லே னறியா மைபொறுத் திலையே
மல்லே புரிபன் னிருவா குவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே.

பொல்லேன் - கொடியேன். மல் - மற்போர். புரி - விரும்பும். வாகு - தோள். புனைதல் - தரித்தல். 29

செவ்வா னுருவிற் றிகழ்வே லவனன் று
ஒவ்வா ததென உணர்வித் ததுதான்
அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே.

திகழ் - விளங்குகின்ற. இசைவித்தல் - அறிவித்தல். 30

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யெனஎன் னைவிதித் தனையே
தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே. 31

கலையே பதறிக் கதறித் தலையூடு
அலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரிவே டர்குலப் பிடிதோய்
மலையே மலைகூ றிடுவா கையனே.

கலை - மான். பிடி - பெண்யானைபோன்ற நடையையுடைய வள்ளிநாயகி. வாகை - வெற்றிமாலை. 32

சிந்தா குலஇல் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென் றுவிடப் பெறுவேன்
மந்தா கினிதந் தவரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே.

சிந்தாகுலம் - துன்பம். விந்தாடவி - வியப்பாகிய ஆசைக் காடு. மந்தாகினி - கங்காதேவி. 33

சிங்கா ரமடந் தையர்தீ நெறிபோய்
மங்கா மலெனக் குவரந் தருவாய்
சங்க்ரா மசிகா வலசண் முகனே
கங்கா நதிபா லகிர்பா கரனே.

சிங்காரம் - அலங்காரம். மங்காமல் - கெடாமல். 34

விதிகா ணுமுடம் பைவிடா வினையேன்
கதிகா ணமலர்க் கழலென் றருள்வாய்
மதிவாள் நுதல்வள் ளியையல் லதுபின்
துதியா விரதா சுரபூ பதியே.

விதி - பிரமன். வாள்நுதல் - ஒளிபொருந்திய நெற்றி. 35

நாதா குமரா நமவென் றரனார்
ஓதா யெனவோ தியதெப் பொருள்தான்
வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே.

நாதா - தலைவனே. வேதா - பிரமன். சேகரன் - முடியிற் சூடுவோன். 36

கிரிவாய் விடுவிக் ரமவே லிறையோன்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையாம் அறிவால்
அரிவா யடியோ டுமகந் தையையே.

பரிவாரம் - அடியார் கூட்டம். அரிவாய் - நீக்குவாய். 37

ஆதா ளியையொன் றறியே னையறத்
தீதா ளியையாண் டதுசெப் புமதோ
கூதா ளகிரா தகுலிக் கிறைவா
வேதா ளகணம் புகழ்வே லவனே.

ஆதாளி - அறிவில்லாமையால் ஆளப்படுபவன். கூதாளம் - கூதாளமலர். கிராதகுலம்- வேடர்குலம். 38

மாஏழ் சனனங் கெடமா யைவிடா
மூவே டணையென் றுமுடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவசங் கரதே சிகனே.

சனனம் - பிறப்பு. ஏடணை : ஈடணை - தனம், தாரம், புத்திரர். 39

வினையோ டவிடுங் கதிர்வேல் மறவேன்
மனையோ டுதியங் கிமயங் கிடவோ
சுனையோ டருவித் துறையோ டுபசுந்
தினையோ டிதணோ டுதிரிந் தவனே.

சுனை - மடு. இதண் - பரண். 40

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே.

சரணம் - பாதம். நமன் - கூற்றுவன். 41

குறியைக் குறியா துகுறித் தறியு
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்று
அறிவற் றறியா மையுமற் றதுவே.

குறி - மோனநிலை. 42

12838
சென்னை-600 008.

*தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா அநுபூ திபிறந் ததுவே.

துகில் - ஆடை. நிகளம்-தளை. 43

---

சாடுந் தனிவேல் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடுஞ் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே.

சாடுதல் - பகைவன்மேற் பாய்தல். வீடு - மோக்ஷம். 44

கரவா கியகல் வியுளார் கடைசென்று
இரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோ கதயா பரனே.

குலிசாயுதம் - வச்சிரப்படை. 45

எந்தா யுமெனக் கருள்தந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே. 46

---

* கந்தரனுபூதி என்னும் நூல் இச்செய்யுளோடு முடிந்து விட்டது; இனி வரும் பாடல்கள் அருணகிரி நாதரால் இயற்றப் பட்டவையல்ல; பிற்காலத்தார் ஒருவரால் பாடி இடைச் செருகப் பட்டவை; அவை அன்னவாதலை அவற்றைக் கொண்டே தெளிவாக அறியலாம். 'பேசா அனுபூதி பிறந்ததுவே' என்னுந் தொடர் முடிவாதலையும் உற்று நோக்குக. அருணகிரியார் திருவாக்கின் செறிவும் அழகும் மேலே வரும் பாட்டுக்களில் சிதைந்திருத்தல் வெளிப்படை.

O26:417 N27

ஆறு றையுநீத் ததன்மேல் நிலையைப்
பேறு அடியேன் பெறுமா றுளதோ
சீறு வருசூர் சிதைவித் திமையோர்
கூறு உலகங் குளிர்வித் தவனே.

பேறு - செல்வமாக. சீறு வரு - சீறி வருகின்ற. கூறு - பங்காகிய. 47

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும்வே லவனே.

பிரான் - பெரியோன். 48

தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் மொருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்க்
கின்னங் களையுங் கிர்பைசூழ் சுடரே.

கின்னம் - துன்பம். 49

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திரஞா னசுகா திபஅத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே.

அற வாடி - முற்றுஞ் சோர்ந்து. கதி-நெறி. வீறு-அகங்காரம். 50

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே. 51

காணா விழியுங் கருதா மனமும்
வீணாய் விடமுன் விதியோ விதியோ

பூணுள் திறமின் புனமும் வனமும்
நாணு துநடந் திடுநா யகனே. 52

ஊனே பொருளா யுழலுற் றடியேன்
வீணே கெடமுன் விதியோ விதியோ
பூணே யிமையோர் புகலே மகவான்
சேணே பெறவேல் விடுதே சிகனே.
புகல் - அடைக்கலம் புகுமிடம். மகவான் - இந்திரன். சேண்-
தூரம். 53

கழுகா ரயில்வேற் கருணைக் கடலில்
முழுகார் குறுகார் முளரி கைக்கொண்டு
ஒழுகார் வினையூ டுழல்வா ரவரே
அழுகார் தொழுநோ யதிபா தகரே.
முளரி - ஓம விறகு. 54

விண்ணோர் பதமும் விரிநீர் புடைசூழ்
மண்ணோர் பதமு மகிழேன் மகிழேன்
தண்ணா ரமுதேய் சயிலப் பகையே
கண்ணா ருனருள் கனியைப் பெறினே.
சயிலம் - மலை. 55

உனையே யலதோர் பரமுண் டெனவே
நினையேன் எனையூழ் வினைநீ டுமதோ
கனைஎழ் கடல்போல் வருகா ரவுணர்
முனையே தெறுசண் முகவே லவனே.
நீடுதல் - நெடிதாய் வருந்துதல். கனைத்தல் - ஒலித்தல். 56

இரவும் பகலுந் துதிசெய் திருதாள்
பரவும் பரிசே பரிசா யருள்வாய்
கரவுண் டெழுசூர் கனையக் கதிர்போல்
விரவுஞ் சுடர்வேல் விடுசே வகனே.
கரவு - வஞ்சனை. 57

இலகுந் துடிநே ரிடையார் விழிகூர்
அலகம் பெனவே யறியா தழிகோ
கலகந் தருசூர் கதறப் பொருதேழ்
உலகம் புகழ்பெற் றிடுமோ கையனே.

துடி - உடுக்கை. 58

மாதோ மலமா யைமயக் கவருஞ்
சூதோ எனமெய் துணியா எனையின்று
ஏதோ இருள்செய் துநிறைந் திடுவார்
தீதோ டஅருள் சிவதே சிகனே. 59

களவும் படிறுங் கதமும் படுமென்
அளவுங் கதிர்கொண் டருள்சேர்ந் திடுமோ
இளகுங் குறமின் இருகோன் முலையும்
புளகம் பரவப் புணர்வே லவனே.

படிறு - பொய். கதம் - கோபம். கோன் - பெரிய. 60

வாழைக் கனிமா மதுரச் சுளையே
ஏழைக் கரிதென் றிடுவா ருளரோ
பாழைப் பயிர்செய் திடுசிற் பரையின்
பேழைப் பொருளா கியபே ரொளியே.

பாழ் - பாழ்நிலம்; மூலப்பகுதி. சிற்பரை - பராசத்தி. பேழை-பெட்டி. 61

சதிகொண் டமடந் தையர்தம் மயலிற்
குதிகொண் டமனத் தனெனக் குறியேல்
மதிகொண் டநுதற் குறமங் கைகுயந்
துதிகொண் டுமணந் தருள்தூ யவனே.

சதி - வஞ்சனை. குயம் - முலை. 62

தாயே எனையாள் தனிவே லரசே
காயே பொருளாய்க் கனிகை விடுமோ

பேயே னிடையென் பெறவந் தெளிதாய்
நீயே மறவா நெறிதந் ததுவே. 63

சின்னஞ் சிறியேன் சிதைவே செயினும்
பென்னம் பெரியோர் பிழைசெய் குவரோ
கன்னங் கரியோன் மருகா கழறத்
தன்னந் தனியே தனையாண் டவனே.

கரியோன் - திருமால்.

துடிபட் டமடந் தையர்சூ றையிலே
குடிபட் டிடுமென் குறைகட் டறுமே
வெடிபட் டெழுசூர் கிளைவே ரொடுசென் று
அடிபட் டிடவென் றமரும் பதியே.

சூறை - சுழல் காற்று. 65

கல்லேய் மனமுங் கணையேய் விழியும்
வில்லேய் நுதலும் பெறுமெல் லியர்வாய்ச்
சொல்லே பதமாய்த் துடிபட் டழிய
வல்லே னலனியான் மயில்வா கனனே.

173381

கணை - அம்பு. 66

கலைகற் கினுமென் கவிபா டினுமென்
நிலைகற் கினுமென் நினைவந் துணராக்
கொலைகற் றிடுவோர் கொடுவஞ் சகமா
மலைகட் டறவென் றருள்வாய் குகனே. 67

சனகா தியருக் கரியாய் தமியை
எனகா ரணமா கவிரும் பினைநீ
கனகா சலவில் லிகளிக் கவரும்
அநகா அமலா அமரர் பதியே.

தமியை - ஒப்பற்றவனே. 68

கல்லேன் அயலார் கவியைப் பொருளாய்ப்
புல்லே னவர்வாழ் வுபுரிந் தருள்வாய்
வல்லே யினிவந் தருளா யணியா
நில்லேன் நிறைநெஞ் சொடுவே லரசே.

புரிந்து - விரும்பி. 69

மஞ்சைப் பொருவார் குழலார் மபலாற்
பஞ்சைப் பலதே வரையும் பரவா
நெஞ்சைப் புரிவாய் நிகழ்மா மதியின்
பிஞ்சைப் புனையும் பெருமான் மகனே.

மஞ்சு - மேசம். பஞ்சு - மெல்லிய. மதியின் பிஞ்சு - பிறைச் சந்திரன். 70

விதிவந் தனைசெய் விமலன் கழலே
கதியென் றடைவார் கடனு வதுவே
அதிவன் பிணியோ டழிநல் குரவும்
மதிசஞ் சலமு மண்ணுய் விடுமே.

விதி - பிரமன். நல்குரவு - வறுமை. மதிசஞ்சலம் - மனோ சலனம். 71

எந்நே ரமுநின் னிருதாள் மலரைப்
பொன்னே யெனயான் புனையப் பெறினென்
அன்னே அமுதே அயில்வே லரசே
கொன்னே பிறவிக் குறைபெற் றிலனே.

கொன்னே - வீணே. 72

அருளைத் தருநின் னடியைப் பணியா
மருளைச் சிதையார் மதிகெட் டவர்தங்
குருளைத் திசையிற் குறியோன் வினவும்
பொருளைத் தெளியப் புகல்தே சிகனே.

குருளைத் திசை - இளமைப் பருவம். 73

தொண்டா கியநந் துயர்தீ ருமருந்து
உண்டா கியுமென் றுலைவாய் மனனே
வண்டார் குழல்வள் ளிமணந் தருளுந்
தண்டார் அயில்வேல் சரணந் துதியே. 74

அழியா நிலைதந் தருள்சே வலனே
விழியால் உணர்வார் விதமே புகல்வாய்
பழியார் புகழார் பழிநண் பிகழார்
ஒழியார் ஒழியார் உலகியா வையுமே. 75

துனிநா ளும்விடா துதொடர்ந் தபலன்
இனிநான் அணுகா மைஇயம் பினனுற்
பனிநாள் மதிசூ டிபணிந் துதொழுந்
தனிநா யகனு கியசண் முகனே.

துனி - அச்சம். 76

ஞானந் தனில்நின் றுநடித் தல்விடா
மோனந் தனையென் றுமொழிந் திடுவாய்
ஆனந் தநடத் தனளித் தருளும்
மானந் தனிவேல் மயில்வா கனனே. 77

மதமுஞ் சினமும் வளருந் தனுவே
சதமென் றுணருஞ் சனனுக் கெளிதோ
கதமுந் தியசூர் கடிவே லவநின்
பதமுஞ் சிதமும் பரமும் பெறவே.

சனன் - மனிதன். சிதம் - ஞானம். 78

ஐயா ருடலன் னியமா னனதா
றையா றையும்நீ யறிவித் தருள்வாய்
செய்யா றுமுகா திகழ்வேல் அரசே
ஐயா குமரா அருளா கரனே. 79

நவியென் றிடுகண் மடவார் நனிகேள்
செவியென் றயில்வேள் புகழ்சென் றிலதோ
கவியென் றிடுநால் வளமுங் கமழப்
புவியென் றுமிருந் தொளிர்புண் ணியரே.

நவ்வி: நவி - மான். கவி - சுக்கிரன். 80

பெரியோர் எனினும் புலேயோர் எனினும்
சிறியோர் எனினுந் தெளிவோர் அவரே
குறியோர் எனினுங் குருவா வருவான்
நெறியோ டொழுகு நிலேபெற் றிடினே.

புலேயோர் - நீசர். குறியோர் - சிறியோர். 81

பத்திக்கு அயலேன் நனிநின் பதமுஞ்
சித்திக் கவிடேன் இது திண் ணமதே
புத்திக் கடலே பொரும்வேல் அரசே
முத்திக் கனியே முனிபுங் கவனே.

முனிபுங்கவன் - முனிசிரேஷ்டன். 82

பேயா கிலும்நன் றதிலும் பிறிதென் று
ஆயா தெனேவந் தடிமைத் தொழில்கொண் டு
ஓயா தினிநீ உணர்வைத் தருவாய்
வாயா ரமுதே மயில்வா கனனே. 83

மிகவுங் கொடியேன் விதிகுன் றிடவந்து
இகமும் பரமுந் தரஎன் றிசைவாய்
சுகமுங் ககமுந் தொடர்வேல் கொடுமுச்
சகமுந் தனிகாத் தருள்சண் முகனே.

சுகம் - கிளி. ககம் – (மற்றப்) பறவை. 84

நசையன் பிலர்பால் நயவா தொழியின்
வசையுண் டெனுமவ் வழிநின் றருள்வாய்

விசையம் புகல்சூர் வெருவப் பொருதெண்
திசையும் புகழத் திகழ்வே லவனே.

நசை - ஆசை. 85

உறுகற் பகமென் றுனையே யடைவேன்
இறுகற் பகைவற் கிதமோ துமதோ
தெறுகற் சிலைகொண் டெயில்செற் றிடுபூண்
தறுகட் செவியன் தருபுத் திரனே.

கற்பகைவன்-இந்திரன். தெறு-கொல்லுகிற. எயில்-மதில்.
86

கள்ளம் படுகண் கடையார் கடைதேர்
உள்ளம் படுமென் துகளைக் களைவாய்
பள்ளம் படுநீ ரெனவே பரிவின்
வெள்ளம் படுநல் வழிவே லவனே.

துகள் - குற்றம். 87

வள்ளைக் குழைமங் கையர்சிங் கியிலே
கொள்ளைப் படுமென் குறைதீ ருமதோ
வெள்ளைத் தனிமால் விடையன் புகழும்
பிள்ளைப் பெருமாள் எனும்பெற் றியனே.

வள்ளை - வள்ளைத் தண்டு. சிங்கி - நஞ்சு. 88

வளையுஞ் சகமா யைமயக் கில்விழுந்து
உளையுந் துயர்இன் னுமுணர்ந் திலையே
அளையுண் டபிரான் மருகா விடுசூர்
களையுஞ் சினவெங் கதிர்வே லவனே. 89

பண்டே தொடர்பற் றெருடுசுற் றமெனும்
வெண்டே ரைமகிழ்ந் துவிழித் திடவோ

கண்டே குறமங் கைதனைக் களவிற்
கொண்டே கடிதே கியகொற் றவனே.

வெண்டேர் - கானல். களவு - களவு நெறி. 90

பொன்ஆ வல்கெடப் பொழியும் புகழோர்
இன்ன ரினியா ரெனஎண் ணுவரோ
துன்னர் கிளைவேர் அறவே தொடும்வேல்
மன்ன பொதுவாய் மழைபெய் திடுமே. 91

பொறியும் புனலும் புதிதும் முதிதுங்
குறியுங் குணமுங் குலமுங் குடியும்
நெறியும் பரிசொன் றுமிலா நிலையான்
அறியுந் தரமோ வேலா யுதனே.

பொறி - தீப்பொறி. புதிது - புதியது. முதிது-பழையது. 92

எங்நே ரமதோ தெரியாது இறல்நாம்
அங்நே ரமதொன் றுகா தெனமுன்
சொன்னே மனனே துவலோ துவலோ
தன்னேர் குகன்நற் சலசச் சரணே.

இறல்- முடிதல். துவலோ-சொல்லாய். சலசம் - தாமரை. 93

தெரியத் தெரியச் செயலுற் றிடுமுன்
துரியப் பொருளைச் சொலுநா ளுளதோ
கரிபெற் றிடுமின் கணவா குறமின்
பரியப் பெரிதும் பணியுத் தமனே.

கரி - யானை. பரிய - அன்பு செய்யும்படி 94

மடிமைப் படினும் மயலுற் றிடினும்
அடிமைக் குடியா ரருள்சே ருவரே

குடிமைக் கிலதோர் கொடுவெற் பதிரப்
படிமைப் புயலே பரிவா யினியே.

மடிமை - வறுமை. மைப்புயல் - கரிய மேகம். 95

வரிவேல் விழியாம் வலைவீ சுமினார்
புரிவே லையிலே பொருதிக் களைவாய்
பரிவே டம்வளைந் ததுபோல் அவுணர்த்
தெரிவேன் முனைமே லெறிசே வகனே.

பரி வேடம் - ஊர்கோள். 96

நனவிற் படுநல் லுலகத் தனையுங்
கனவிற் பொருளாய்க் கருதா எனைநீ
வினவிச் சொலுநா ளுளதோ விதியைச்
சினவிச் சிறைவிட் டருள்தே சிகனே. 97

காடும் மலையுங் கடலும் உருளச்
சாடுந் தனிவே லுடையாய் சரணம்
ஆடும் மயில்வே லரசே சரணம்
பாடும் வரதற் பரனே சரணம். 98

அனியா யமிதென் றவரே மடவார்
துனிஆர் பவமுந் துயருங் களைவார்
கனியார் முருகன் கழல்பெற் றிடுவார்
இனியார் இனியார் இவருக் கிணையே. 99

ஆளா யயில்வே ளடியிற் படிவார்
கோளாற் பிறரைக் குறிசெய் தழியார்
மாளார் சமனால் மறுகார் பகையால்
மீளார் வினையால் வெருவா ரவமே.

படிவார் - பணிவார். கோள் - துன்பம், சமன்-இயமன். 100

உடலைச் சுமையா கழுயற் சிகெடா
நடலைத் துணிவாழ் வைநயந் திடவே
கடலைத் துகள்செய் திடவேல் கடவும்
விடலைப் பெருமா னெனும்வித் தகனே. 101

பிணியும் பசியும் பெருகுந் துயரில்
அணியுங் கழல்கட் சுயலாய் விடவோ
கணியுங் குரவுங் கமழோ திமயல்
தணியும் படிவந் தருள்சண் முகனே.
கணி - வேங்கை மரம். குரவு - குரவ மரம். 102

கல்லுங் கரையக் கவிபா டியிதஞ்
சொல்லுந் தொழிலே தொழிலாய் விடவோ
கொல்லுந் தொழிலிற் கொடியோர் மடியச்
செல்லுஞ் சுடர்வேற் செறிபா ணியனே.
பாணி - கை. 103

முறுகுந் தழல்போல் முடுகுஞ் சமனல்
மறுகும் பொழுதும் மறவேன் மறவேன்
குறுகுங் குலிசன் குலவா ரணமால்
பெறுகுஞ் சரிதோய் பெருமான் அடியே.
குலிசன் - இந்திரன். குலவாரணம் – பட்டத்து (வெள்ளை) யானை. குஞ்சரி - தெய்வயானை யம்மையார். 104

வாழ்வார் உறவாய் மகிழ்வார் பலருந்
தாழ்வார்க் கருள்உத் தமன்நீ யலையோ
பேழ்வா யரவும் பிறைவெள் ளிறகுஞ்
சூழ்வார் சடையார் தொழுதே சிகனே.
வெள்ளிறகு - கொக்கிறகு. வார் சடையார் - கங்கைச் சடையார். 105

கந்தரனுபூதியின்

# செய்யுள் முதற்குறிப் பகராதி


| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| அடியைக் | 6 | ஊணே | 13 | கூர்வேல் | 7 |
| அமரும் | 3 | எந்தாயு | 11 | கெடுவாய் | 3 |
| அரிதாகிய | 6 | எந்நேரம | 20 | கைவாய் | 4 |
| அருளைத் | 16 | எந்நேரமு | 16 | சதிகொண் | 14 |
| அழியா | 17 | ஐயாரு | 17 | சனகா | 15 |
| அறிவொன் | 12 | கரவா | 11 | சாகாதெ | 10 |
| அனியா | 21 | கருதாமற | 6 | சாடுந்த | 11 |
| ஆடும்பரி | 1 | கலைகற் | 15 | சிங்கார | 9 |
| ஆதார | 7 | கலையே | 8 | சிந்தா | ,, |
| ஆதாளி | 10 | கல்லுங் | 22 | சின்னஞ் | 15 |
| ஆளா | 21 | கல்லேய் | 15 | செம்மான் | 4 |
| ஆருறையு | 12 | கல்லேன் | 16 | செவ்வா | 8 |
| ஆனாஅமு | 7 | கழுகா | 13 | ஞானந் | 17 |
| இரவும் | 13 | களவும் | 14 | தன்னந் | 12 |
| இலகுந் | 14 | கள்ளம் | 19 | தாயே | 14 |
| இல்லெயெ | 8 | காடும் | 21 | திணியா | 2 |
| உடலைச் | 22 | காணாவிழி | 12 | துடிபட் | 15 |
| உதியா | 5 | கார்மா | 3 | துனிநா | 17 |
| உருவாய | 12 | காளைக்கு | 6 | தூசாம | 11 |
| உல்லாச | 1 | கிரிவாய் | 9 | தெரியத் | 20 |
| உறுகற் | 19 | குறியைக் | 10 | தொண்டா | 17 |
| உனையே | 13 | கூகாஎன | 4 | நசையன் | 18 |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| நவியென் | 18 |
| நனவிற் | 21 |
| நாதாகு | 9 |
| நெஞ்சக் | 1 |
| பண்டே | 19 |
| பத்திக்கு | 18 |
| பாழ்வாழ் | 8 |
| பிணியும் | 22 |
| பெரியோ | 18 |
| பேயா | ,, |
| பேராசை | 5 |
| பொறியும் | 20 |
| பொன்ஆ | ,, |
| மகமாயை | 2 |
| மஞ்சைப் | 16 |
| மடிமைப் | 20 |
| மட்டேர் | 3 |
| மதமுஞ் | 17 |
| மதிகெட் | 12 |
| மாஎழ் | 10 |
| மாதோ | 14 |
| மிகவுங் | 18 |
| மின்னே | 7 |
| முருகன் | 4 |
| முருகன்கும | 5 |
| முறுகுந் | 22 |
| மெய்யே | 7 |
| யாமோதிய | 5 |
| வடிவுங் | 6 |
| வரிவேல் | 21 |
| வளைபட்ட | 2 |
| வளையுஞ் | 19 |
| வள்ளைக் | ,, |
| வாழைக் | 14 |
| வாழ்வா | 22 |
| வானோபுன | 2 |
| விண்ணோர் | 13 |
| விதிகாணு | 9 |
| விதிவந் | 16 |
| வினையோட | 10 |


சென்னை-600 008.

Tamils by means of translations the best of the world's thought as embodied in Fiction, Science, Philosophy, Politics, and Economics; and to bring within the reach of the Tamils the history, thought and life of the peoples of the world written in good prose, descriptive, expository and critical. If our efforts in this direction will but stimulate some creative effort and bring out talent which may have been dormant for want of suitable opportunity by supplying facilities for its expression in writing, we shall feel more than rewarded in one sense.

The following gentlemen are looking after the editing of the classics :—

**Dr. S. Krishnaswami Iyengar, Rao Sahib**, M.A., Ph. D.,
*University Professor of Indian History & Archæology Madras; and Hon: Correspondent of the Archæological Department of the Government of India.*

**Mr. C. S. Srinivasachari,** M. A.,
*Professor of History, Pachaiyappa's College, Madras.*

**Mr. V. O. Chidambaram Pillai**, *Pleader, Koilpatti.*

**Mr. Mani Thirunavukkarasu Mudaliar,**
*Tamil Lecturer, Pachaiyappa's College, Madras.*

**Mr. T. P. Meenakshisundaram**, M.A., B.L.,
*High Court Vakil, Madras.*

**Mr. P. D. Sankaranarayana Pillai**, B. A., B. L.,
*High Court Vakil, Madras.*

Madras,
7—2—27.

**V. Ramaswamy Sastrulu & Sons.**

## விற்பனைக்குத் தயாராக இருக்கும் நூல்கள்

| | அ. | பை. |
|---|---|---|
| குமரேச சதகம் பாட்டும் குறிப்பும் | 5 | 0 |
| கோவிந்த சதகம் பாட்டும் குறிப்பும் | 2 | 0 |
| அறப்பளீசுர சதகம் பாட்டும் குறிப்பும் | 5 | 0 |
| திருவேங்கட சதகம் பாட்டும் குறிப்பும் | 5 | 0 |
| தண்டலையார் சதகம் பாட்டும் குறிப்பும் | 3 | 0 |
| கந்தர் கலிவெண்பா பாட்டும் குறிப்பும் | 1 | 6 |
| திருமுருகாற்றுப்படை பாட்டும் குறிப்பும் | 2 | 0 |
| சரஸ்வதி அந்தாதி பாட்டும் குறிப்பும் | 1 | 6 |
| நால்வர் நான்மணி மாலை பாட்டும் குறிப்பும் | 1 | 6 |
| அபிராமி யந்தாதி பாட்டும் குறிப்பும் | 1 | 6 |
| நன்னூல் மூலம் | 3 | 0 |
| சௌந்தரிய லகரி பாட்டும் குறிப்பும் | 1 | 6 |
| விநாயகர் அகவல் பாட்டும் குறிப்பும் | 1 | 0 |
| ஆனந்த லகரி பாட்டும் குறிப்பும் | 1 | 6 |
| சோமேசர் முதுமொழி வெண்பா பாட்டும் குறிப்பும் | 2 | 0 |
| சிவசிவ வெண்பா பாட்டும் குறிப்பும் | 2 | 0 |
| திருத்தொண்டர் வெண்பா பாட்டும் குறிப்பும் | 1 | 6 |
| கந்தரனுபூதி பாட்டும் குறிப்பும் | 1 | 6 |

V. RAMASWAMY SASTRULU & SONS

***292, Esplanade, Madras.***


కందరనుభూతి. 0-1-6